HALF YEARLY EXAM

QUESTION PAPER

ORIGINAL EXAM PAPERS

aglasem.com

B

அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2023

KANCHIPURAM DT

பதினொன்றாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி | தாவரவியல் | மதிப்பெண்கள் : 70

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15×1=15

1) உயிரியலின் புதிர் என அழைக்கப்படுவது?
அ) ஆல்கா ஆ) பாக்டீரியா இ) வைரஸ் ஈ) பூஞ்சைகள்

2) தலைகீழ் ஒமேகா வடிவ வாஸ்குலார் கற்றை எந்த தாவரத்தின் உள்ளமைப்பில் காணப்படுகிறது.
அ) சைகஸின் பவழவேர்கள் ஆ) செலாஜினெல்லா தண்டின் உள்ளமைப்பு
இ) சைகஸின் தண்டின் உள்ளமைப்பு ஈ) சைகஸ் கூட்டிலைக் காம்பின் உள்ளமைப்பு

3) தவறான இணையைத் தேர்ந்தெடு
அ) மியூஸா - ஓர் நடுநரம்பு ஆ) லாப்லாப் - முச்சிற்றிலை அங்கைக்கூட்டிலை
இ) அகாலிஃபா - இலை மொசைக் ஈ) அலமாண்டா - மூவிலை அமைவு

4) சமச்சீரற்ற மலர்கள் காணப்படும் தாவரம்
அ) கேனா இண்டிகா ஆ) பைசம் சட்டைவம்
இ) ஹைபிஸ்கஸ் ரோசாசைனென்சிஸ் ஈ) மாஞ்சிஃபெரா இண்டிகா

5) மரபுவழி வகைப்பாடு எதனைப் பிரதிபலிப்பதால் மிகவும் விரும்பத்தக்க வகைப்பாடாக உள்ளது.
அ) ஒப்பீட்டு உள்ளமைப்பியல் ஆ) உற்பத்தி செய்யப்பட்ட பூக்களின் எண்ணிக்கை
இ) ஒப்பீட்டு செல்லியல் ஈ) பரிணாம உறவு முறை

6) மைட்டோ காண்டிரியாவை கண்டறிந்தவர்?
அ) K.R. போர்டர் ஆ) காமிலோ கால்ஜி இ) A. கோலிக்கர் ஈ) ஜார்ஜ் பாலேடு

7) சென்ட்ரோமியர் இதற்கு தேவை
அ) படியெடுத்தல் ஆ) குறுக்கே கலத்தல்
இ) சைட்டோபிளாசம் பிளவுறுதல் ஈ) குரோமோசோம்களை துருவப்பகுதி நோக்கி நகர்த்துவதற்கு

8) உயிர் மண்டலத்தில் மிக அதிக அளவில் காணப்படும் புரதம் _____
அ) மித்தியோனைன் ஆ) RUBISCO இ) ரைபோசைம் ஈ) நியுக்ளின்

9) மேக்ரோஸ்கிலிரைடுகள் எந்த தாவரத்தில் காணப்படுகிறது.
அ) குரோட்டலேரியா ஆ) நிக்கோடியானா இ) ஹீலியாந்தஸ் ஈ) ஐபோமியா

10) வழக்கமாக ஒரு விதையிலை தாவரத்தில் கற்றளவு அதிகரிப்பதில்லை. ஏனென்றால்
அ) செயல்படும் வாஸ்குலக் கேம்பியத்தை கொண்டுள்ளது.
ஆ) செயல்டும் வாஸ்குலக் கேம்பியத்தை கொண்டிருப்பதில்லை
இ) கேம்பியத்தின் செயல்பாடு தடை செய்யப்படுகிறது.
ஈ) அனைத்தும் சரியானவை

11) முன்ச்சின் கருத்தாக்கம் எதை அடிப்படையாகக் கொண்டது?
அ) விறைப்பழுத்தச் சரிவு மற்றும் உள்ளீர்த்தல் விசை காரணமாக உணவு இடப்பெயர்ச்சி அடைதல்
ஆ) விறைப்பழுத்தம் காரணமாக உணவு இடம்பெயர்தல்
இ) உள்ளீர்த்தல் விசை காரணமாக உணவு இடம்பெயர்தல்
ஈ) மேற்கூறியவற்றுள் எதுவுமில்லை

12) மீண்டும் இடம்பெயராத தனிமம் எது?
அ) பாஸ்பரஸ் ஆ) பொட்டாசியம் இ) கால்சியம் ஈ) நைட்ரஜன்

13) எவ்வகை பச்சையத்தில் பைட்டால் வால்பகுதி காணப்படுவதில்லை
அ) பச்சையம் a ஆ) பச்சையம் b இ) பச்சையம் c ஈ) பச்சையம் d

14) ஒரு மூலக்கூறு பைருவிக் அமிலம் முழுவதுமாக ஆக்ஸிஜனேற்றமடைந்து உருவாகும் ATP மூலக்கூறுகளின் எண்ணிக்கை
அ) 12 ஆ) 13 இ) 14 ஈ) 15

15) மக்காச்சோள வேரின் நுனி ஆக்குத்திசுவில் உள்ள ஒரு செல் பகுப்படைந்து ஒரு மணி நேரத்தில் எத்தனை புதிய செல்களை உருவாக்குகிறது?
அ) 17,500 ஆ) 3,50,000 இ) 17,800 ஈ) 1,50,000

பகுதி - II

ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும்.

வினா எண். 24க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். 6×2=12

16) மேக்னடோசோம்கள் என்றால் என்ன?

17) ஆம்பர் என்பது என்ன? எந்தப் பிரிவு தாவரம் ஆம்பரைத் தருகிறது?

18) இலையின் பணிகள் யாவை?

19) பூவடிச்செதிலுடைய, பூக்காம்புச் செதிலற்ற இருபால் மலர், முழுமையான ஐந்தங்க மலர், தனித்த புல்லி வட்டம், தனித்த அல்லி வட்டம், மேல்மட்டச் சூலகப்பை கொண்ட மலரின் மலர் சூத்திரத்தினை எழுதுக.

20) டாட்டுரா மெட்டல் தாவரத்தின் சூலக வட்டத்தை குறித்து எழுதுக?

21) மூடிய மைட்டாசிஸ் என்றால் என்ன?

22) ஸ்விட்டர் அயனி எனப்படுவது யாது?

23) நீரியல் திறனைக் கட்டுப்படுத்தும் கூறுகள் யாவை?

24) ரூபன் மற்றும் கேமனால் உருவாக்கப்பட்ட ஒளிச்சேர்க்கை சமன்பாட்டை எழுதுக?

பகுதி - III

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளி. வினா எண். 33 கட்டாய வினா 6×3=18

25) பூஞ்சைகளால் தாவரங்களில் ஏற்படும் மூன்று நோய்களைக் குறிப்பிடுக.

26) பிளக்டோ ஸ்டீல் என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டு தருக.

27) இலைத்தொழில் தண்டு குறிப்பு எழுதுக.

28) கூட்டுக்கனியை திரள் கனியிலிருந்து வேறுபடுத்துக.

29) ரிசினஸ் கம்யூனிஸ் தாவரத்தின் ஆண் மலரின் பண்புகளை எழுதுக?

30) மறைமுக செல்பகுப்பின் முக்கியத்துவத்தில் ஏதேனும் மூன்றினை எழுதுக?

31) பூட்டு - சாவி இயக்க முறையில் நிகழும் நொதிச் செயலை எழுதுக.

32) பிளாஸ்மா சிதைவு - வரையறு.

33) சைட்டோகைனின் வாழ்வியல் விளைவுகள் ஏதேனும் மூன்றினை எழுதுக?

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5×5=25

34) அ) தாவர வளர்ச்சியை அளவிட உதவும் வில் ஆக்சனோ மீட்டர் ஆய்வை எழுதுக.? (அல்லது)

ஆ) மைட்டோகாண்ட்ரியா உட்சவ்வில் நடைபெறும் வினைகளை விவரி?

35) அ) ஆஞ்சியோஸ்பெர்ம்களின் பூச்சியுண்ணும் உணவூட்ட முறையினை விவரி? (அல்லது)

ஆ) சாற்றுக்கட்டைக்கும், வைரக்கட்டைக்கும் இடையேயான வேறுபாடுகளை எழுதுக.

36) அ) DNA வின் பண்புகளை எழுதுக. (அல்லது)

ஆ) தாவரச் செல்லின் நுண்ணமைப்பை படம் வரைந்து பாகங்கள் குறிக்கவும்?

37) அ) உயிரியப் பல்வகைமையைப் பாதுகாப்பதில் தேசிய பூங்காக்களின் பங்கினை விவரி?

(அல்லது)

ஆ) சூல் ஒட்டுமுறையின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

38) அ) பாசிகளில் பகங்கணிகத்தின் வடிவம் தனித்துவம் வாய்ந்தது என கருதுகிறாயா? உனது விடையை நியாயப்படுத்துக. (அல்லது)

ஆ) ஐம்பெரும்பிரிவு வகைப்பாட்டினை விவாதி. அதன்நிறை குறைகளை குறிப்பு சேர்க்கவும்?

****/****

QUESTION PAPERS

GET PREVIOUS YEAR QUESTION PAPERS FOR ALL CLASSES FOR CBSE, ISCSE, ISC AND ALL ALL STATE BOARDS HERE AT AGLASEM.COM

BOARD WISE

- Andhra Pradesh Board Question Papers
- Assam Board Question Papers
- Bihar Board Question Papers
- Chhattisgarh Board Question Papers
- Goa Board Question Papers
- Gujarat Board Question Papers
- Haryana Board Question Papers
- Himachal Pradesh Board Question Papers
- J&K State Board Question Papers
- Jharkhand Board Question Papers
- Karnataka Board Question Papers
- Kerala Board Question Papers
- Madhya Pradesh Board Question Papers
- Maharashtra State Board Question Papers
- Manipur Board Question Papers
- Meghalaya Board Question Papers
- Mizoram Board Question Papers
- Nagaland Board Question Papers
- Orissa Board Question Papers
- Punjab Board Question Papers
- Rajasthan Board Question Papers
- Tamil Nadu Board Question Papers
- Telangana State Board Question Papers
- Tripura Board Question Papers
- Uttarakhand Board Question Papers
- Uttar Pradesh (UP) Board Question Papers
- West Bengal (WB) Board Question Papers